

திருச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையுடன் இணைந்த கி.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவமனையில் (புத்தூர்) புற்றுநோய் சிகிச்சை பிரிவு மற்றும் தணிப்பு சேவை மையத்தையும், இரண்டு ஊடுகதிர் கருவிகள், நவீன சலவையகம் மற்றும் சூரிய மின் உற்பத்தி கருவி ஆகியவற்றின் சேவைகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன கி.ஆ.பெ. மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.குமரவேல். மருத்துவமனை துணை கண்காணிப்பாளர் மரு.அருண்குமார் , மற்றும் மருத்துவர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகர தி.மு.க மாணவரணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி பொன்னம்மா பேட்டையில் உள்ள கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் விளையாட்டு உபகரணங்களை வழங்கி போட்டியை தொடங்கி வைத்தார். உடன் மாநகர அமைப்பாளர் மணிகண்டன் தலைமை வகித்தார் மற்றும் பகுதி கழக செயலாளர்கள். கேபிள் ராஜா, மணமேடு மோகன் துணை அமைப்பாளர்கள் சுந்தர், வெங்கடேஷ், இளஞ்செழியன், சீனிவாசன், ஹிந்து ஜா ஆகியோர் இருந்தனர்.

### “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி - மாவட்ட- மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திமுக நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அறிவுறுத்தலின்படி, வருகின்ற 09.01.2026 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு சம்மந்தமாக, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியின் மாவட்ட– மாநகர– ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனை கூட்டம் எனது தலைமையிலும், கழக மகளிர் அணி செயலாளர் ஹேலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மகளிர் அணி இணை செயலாளர் குமரிவிஜயக்குமார், மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., டெல்டா மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் ரேகாபிரியதர்ஷினி, மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையர்கண்ணி, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட – மாநகர– நகர – பகுதி – பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர் அனைவரும் தவறாமல் பெருந்திரலாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. ஜனவரி 26 தஞ்சையில் நடைபெறும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் திமுக டெல்டா மண்டல மகளிர் மாநாடு,
2. திராவிட பொங்கல் மகளிர் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்மந்தமாக.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### திராவிட மாடல் ஆட்சியில் கோவைக்கு பெருமை சேர்க்கும் வகையில்

# ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக விளையாட்டு திடல் அமைக்க திட்டம்!!

## விளையாட்டு ஆர்வலர்கள் வரவேற்பு!

கோவை, ஜன. 8 –

திராவிட மாடல் ஆட்சியில் கோவைக்கு பெருமை சேர்க்கும் வகையில் கோவை மாவட்டம், கவுண்டம்பாளையம் பகுதியில் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக விளையாட்டு திடல் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு விளையாட்டு ஆர்வலர்கள் வரவேற்பு அளித்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது : கோவை மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் சார்பாக மாற்றுத் திறனாளிகளின் மனம் மற்றும் உடலமைப்பை மேம்படுத்தும் விதமாக மாற்றுத்திறனாளிகள் விளையாடுவதற்கு ஏதுவாக பிரத்யேகமான விளையாட்டு திடல் அமைத்திட வேண்டும் என நீண்ட நாளாக கோரிக்கை விடுத்து வந்தனர். தொடர் கோரிக்கை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், விளையாட்டு திறனை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் படி கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 33வது வார்டுக்குட்பட்ட கவுண்டம்பாளையம் வடக்கு பகுதியில் மாநகராட்சி காலி இடத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் மாற்றுத்திறனாளிக்கான பிரத்யோக விளையாட்டு திடல் அமைக்க திட்டமிட ப்பட்டுள்ளது. புதியதாக அமைக்கப்பட உள்ள விளையாட்டு மைதானத்தில் பல்வேறு வசதிகள் வர உள்ளன. கூடைப்பந்து. இறகுப்பந்து, டேபிள் டென்னிஸ் மற்றும் இதர உள் விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏதுவாக மர தளத்துடன் கூடிய உள் விளையாட்டரங்கம் அமைக்கப்படும். மேலும் வீரர்களுக்கான பிரத்யேக உடற்பயிற்சி கூடமும் இடம்பெறும்.

இது ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அலுவலகம், விளையாட்டு உபகரணங்களுக்கான அறை, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு கழிவறை மற்றும் பார்வையாளர்கள் பகுதி அமைக்கப்படும். மேலும் குண்டு ஏறிதல், தட்டு எறிதல் போன்ற வெளி விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கான வெளிப்புற விளையாட்டு திடல் மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதியும் இந்த திட்டத்தில் அடங்கும். இதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப் பட்டுள்ளது. மாகராட்சி கல்வி நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும். இதற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகத்துக்கு கருத்துரு அனுப்ப பட உள்ளது என்று கூறினர்.

இதற்கான தீர்மானம் சமீபத்தில் நடந்த மாநகராட்சி மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து விளையாட்டு ஆர்வலர்கள் கூறுகையில் : கோவையில் மாற்றுத்திறனாளிக்கான பிரத்யேகமான விளையாட்டு திடல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி மாற்றுத்திறனாளிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு மட்டுமின்றி அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர நல் வாய்ப்பாக அமையும் என்றனர். இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

# ஷோகாட்டும் ஷாக்களுக்கு..



அறுதிப் பெரும்பான்மை இல்லை

அயோத்தியிலும் வெற்றி
இல்லை..

ஒரு கிலோ மீட்டர் சாலை போட
250 கோடி என்று கணக்கெழுதிய துவாரகா சாலை ஊழல் உலகம் சிரிக்கிறது..

இதுல

நாலு கோடி பணம்
இரண்டு கிலோ தங்கம் கொடுத்து

கூவத்தூர்ல தலைவனான எடப்பாடிய முதல்வராக்கி இவரு ஊழலை ஒழிக்க போறாராம்..

பிதற்றுவதை எல்லாம் நம்பி
பின் செல்வதற்கு
பீகார் அல்ல

இது தமிழ்நாடு..

**என்ன நாஞ்**
**சொல்றது...**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### சேலத்தில் பொன்குமார் தலைமையில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் சார்பில்

# 3185 பயனாளிகளுக்கு ரூ.2,27 கோடியில் நல உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி பேச்சு!

சேலம், ஜன. 8 –

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.01.2026 அன்று சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் முன்னிலையில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலகட்டத்தில் பொறுப்பேற்று தனது திறமையால் சிறப்பான ஆட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக மகளிர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஆகிய அனைத்து தரப்பு மக்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக சென்றடையும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக உடல் உழைப்பு தொழிலாளர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் என அனைத்தையும் உயர்த்தி வழங்கி அவர்களை கை தூக்கி விடும் அரசாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் அனைத்து திட்டங்களையும் அவர்களுக்கு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 3024 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை, 109 பயனாளிகளுக்கு ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை, 6 பயனாளிகளுக்கு ரூ.4500 மதிப்பீட்டில் கண்கண்ணாடி, 1 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் ஓய்வூதியம், 8 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.2.80 இலட்சம், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.2.05 இலட்சம், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எல்டைப்) 16 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொள்ள உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எம்டைப்) 20 பயனாளிகளுக்கு ரூ.29.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு வீடுகளும் என மொத்தம் 3185 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்கள் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 10,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வீடுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கட்டுமான தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3000 கோடிக்கு மேல் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் பல புதிய திட்டப்பணிகளையும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக திருமண நிதியுதவி ரூ.5,000 இருந்து ரூ.20,000 ஆகவும், மகப்பேறு உதவித்தொகை ரூ.6,000 இருந்து ரூ.18,000 வரையிலும், விபத்து மரண உதவித்தொகையாக ரூ.8,00,000 உயர்த்தி வழங்கியதுடன் கல்வி உதவித்தொகை 6ம் வகுப்பு முதல் வழங்கி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கட்டாயம் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சொந்தமாக மனை வைத்திருந்தால் வீடு கட்டிக்கொள்ள ரூ.4,00,000 உதவித்தொகையும், சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோய், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலார்களுக்கு ரூ.12,000, ஓய்வு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட குடும்ப அட்டைதார்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தியுள்ளார்கள் மேலும், தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தயாராக உள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தொழிலாளர் உதவி ஆணையர்கள் சண்பகராமன் (சமரசம்), திருநந்தன் (அமலாக்கம்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




அய்கிய,அமீரக, தமிழ் கலை இலக்கிய விழாவின் 4ஆம் ஆண்டு தொடக்க விழா துபாய் ஏர்போர்ட் மில்லினியம் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கவிஞர் அறந்தாங்கி வெங்கடேசன், பாடல் ஆசிரியர் குட்டி ரேவதி,எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர் சைத்தன்யா ஆகியோர் உரையாற்றினர்.தமிழுப் பாரம்பரிய முறைப்படி பல்வேறு கலை நிகழ்ச்சிகள்,புத்தக வெளியீடுகள், இலக்கிய கூடுகை, கருத்தியல் ஆழம் கொண்ட உரைகள் என பரணி விழா நடைபெற்றது. விழாவினை,பரணி குழும நிறுவனர் சேன்யோ மற்றும் பரணி குழும உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.



ஓய்வூதியம் சார்ந்த 23 ஆண்டுக்கால தொடர் கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள் சார்பில் பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. தமிழக அரசு அலுவலர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை, புதிய வடிவில் கொண்டு வந்து,தமிழக அரசு அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் உள்ளிட்டோர் 23 ஆண்டுகளாக போராடி வந்தனர். இவர்களை காப்பாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி. இராசரத்தினம்
## சனவரி 8 (1993)



**செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.**

**“தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**